# வாக்குமூலம்
# குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி
# CC வழக்கு எண்.72/2015
# வழக்கு சாட்சி. அ.சா.3

| **பெயர்:** | குழந்தை வேலு | **ஜாதி:** | |
|---|---|---|---|
| **தந்தை பெயர்:** | சண்முகம் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | | **வயது :** | 60/2023 |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)
சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**19.05.2023**

**முதல் விசாரணை:-**

1) நான் பரவாக்கோட்டையில் வசித்து வருகிறேன். புகார்தாரர் எதிரிகள் அனைவரையும் எனக்குத் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். நான் 9 ஆண்டுகளுக்கு முன்னர் பஞ்சாயத்து போர்டு ஆப்பீஸ் அருகே நின்று கொண்டு இருந்தேன். அப்போது அறந்தாங்கி போலிசார் படம் வரைந்து என்னிடம் கையொப்பம் கேட்டனர். நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னுடன் சுந்தரம் என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை:-

ராஜேந்திரன் எனக்கு உறவினரா என்றால் நண்பர். உறவினர் அல்ல. நான் நின்று கொண்டிருந்த பஞ்சாயத்து போர்டுக்கும் ராஜேந்திரன் கொல்லைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 மீட்டர் இருக்கும். நான் கையொப்பம் செய்ததில் போலிசார் ஏதும் எழுதியிருந்தார்களா என்றால் சரியாக கவனிக்கவில்லை. என்னிடம் விபரம் கூறி கையொப்பம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள்.

மறு விசாரணை :-
இல்லை.